CC 212/2016

28.07.2023

அ.சா.2

பெயர்:மணிகண்டன்

த/பெ. சக்திவேல்

அ.சா.2 கு.ப.ம.எண். 5357/2022-ன் கீழ் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused Present.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ நடந்த சாலை பிரதான சாலை என்றால் சரிதான். வெளியூர்காரர்கள் பயணிக்கும் சாலை என்றால் சரிதான். சம்பவம் நடந்தவுடன் நிறைய கூட்டம் கூடியது, நானும் கூட்டம் கூடிய பிறகு அங்கிருந்தேன். சம்பவ இடம் வளைவான பகுதி என்றால் சரிதான். சம்பவ இடத்தில் நிறை குடியிருப்புகளும், வர்த்தகம் செய்யக்கூடிய கடைகளும் அங்கு உள்ளது என்றால் சரிதான்.

சம்பவ இடத்தின் அருகில் இருந்தவர்கள் சம்பவம் நடந்தபிறகு அங்கு கூடிவிட்டார்கள் என்றால் சரிதான். நானும் தமிழரசனும் ஒரு வாகனத்திலும், பால்பாண்டியனும் ஜான்பாட்ஷாவும் ஒரு வாகனத்திலும் ரமேஷ்ம் சாகுல் அமீதும் ஒரு வாகனத்திலும் சென்றோம் என்றால் சரிதான். மேற்படி 3 வாகனங்களும் அதிவேகமாக செல்லக்கூடிய வாகனங்கள் என்றால் சரியல்ல, சாதாரணமாக சாலையில் ஓட்டக்கூடிய வாகனம்தான். மேற்படி வாகனங்கள் 200 சிசி இருக்கும் என்றால் சரிதான். அந்த வாகனங்கள் அதிவேகமாகச் செல்லும் என்றால் சரிதான்.

மேற்படி வாகனங்களில் ஒருத்தரை ஒருத்தர் முந்திக்கொண்டு சென்றோம் என்றால் இல்லை ரமேஷ் முன்னால் சென்றுகொண்டிருந்தார். சம்பவ இடத்தில் இருந்து தொலைபேசியில் அழைத்து சொன்ன பின்புதான் விபத்து ஏற்பட்டது ரமேஷ்க்குத் தெரியும். நாங்கள் சுமார் 50 , 100 அடி இடைவெளியில் வாகனத்தில் சென்றோம் என்றால் சரிதான். நாங்கள்தான் ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு செல்லும்போது வேகமாகச் சென்று மினி பஸ் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல.

விபத்து ரோட்டின் மையப்பகுதியில் நடந்தது என்றால் சரியல்ல, சாலையின் இடது ஓரத்தில் நாங்கள் சென்றுகொண்டிருந்தோம். எதிரே வந்த மினி பஸ் மோதி விபத்தை ஏற்படுத்தியது. விபத்து மையரோட்டிற்கு மேல்புறமாக நடந்தது என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாகனத்தை இயக்கிச் சென்றவர்கள் தலைக் கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல, தலைக்கவசம் அணிந்திருந்தார்கள்.

தலைகவசம் அணியவில்லை என்றாலும் அவ்வாறு தலைக் கவசம் அணிந்திருந்தால் விபத்தில் இறந்து போன நபருக்குக் காயம் ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் சரியல்ல. புகார் சம்பவதன்று மதியம் சுமார் 2.30 மணிக்கு கொடுத்தோம். காவல்துறை அதிகாரிகள் மருத்துவமனையில் வைத்து புகார் வாங்கிக்கொண்டார்கள். என்னிடம் போலிசார் வெற்றுத் தாளில் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல.

சம்பவ இடத்திற்கு அருகே பேருந்து நிறுத்தம் இருக்கிறதா என்றால் எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் பேருந்து நிறுத்தம் இருக்கிறது அதைத் தெரிந்து கொண்டு வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போது கூறிய விபரங்களைதான் போலிசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். இறந்து போன நபர் தலைக்கவசம் அணியாமல் சாலை விதிகளை மதிக்காமல் அதிவேகமாக வாகனத்தை இயக்கி தன்னிச்சையாக நின்று கொண்டிருந்த பேருந்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/. Thiru. E. Pragasam B.A.,B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.